**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**DW 3- OS. No. 250/2017**

2023 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்வு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா Grade2 Bench Clerk அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.கௌரிஷ்வரன் | தொழில் : |
| த/பெ. : திரு, தெய்வசிகாமணி | வயது : 34 |
| முகவரி : | |

**அழைப்பாணையின் பேரில் பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் திருப்பூர் வாவிபாளையம் Punjab Nationa வங்கியில் துணைமேலாளராக பணிபுரிந்து வருகிறேன் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் மேலாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் மேலாளருக்கு எனக்கு அனுமதி கடிதம் அளித்துள்ளார். அனுமதி கடிதம் பிரதிவாதி தரப்பில் EX Y2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் Bloom Knit Finishtures என்ற நிறுவனமானது ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் வங்கியில் 8.02.2008 ல் வங்கி கணக்கிற்கு துவங்கியுள்ளார்கள். 20.10.2008 லேயே மேற்படி வங்கிக்கணக்கானது முடிக்கப்பட்டு விட்டது. அது நடப்பு கணக்காகும். கணக்கு எண் 05581131000336. அழைப்பாணையில் வங்கிக் கணக்கு துவங்கியதற்கான படிவமும், பங்கு தாரர் ஒப்பந்தமும், அடையாள அட்டையும் மற்றும் வங்கிக் கணக்கு பட்டியலும் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இருந்தது. மேற்படி ஆவணங்களின் நகல் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.த.சா 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் வங்கிக் கணக்கு முடிக்கப்பட்டதற்கான கடிதம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இருந்தது. 2008 லேயே கணக்கு முடிக்கப்பட்டதால் அது தொடர்பான ஆவணங்கள் அலுவலக கோப்பில் இல்லை. எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை**

1. நான் Punjab Nationa வங்கியில் எப்போது பணிக்கு சேர்ந்தேன் என்றால் 2013 ல் சேர்ந்தேன். என்ன பணியில் சேர்ந்தேன் என்றால் Clerikal Staff ஆக சேர்ந்தேன். படிப்படியாக பதவி உயர்வு பெற்று துணை உதவி மேலாளராக உள்ளேன் என்றால் ஆமாம். எனக்கு வங்கி விதிமுறைகள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். முந்தைய நிறுவனமானது ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் வங்கியானது எங்களுடன் வங்கியுடன் இணைக்கப்பட்டது என்றால் 1.4.2020. மேற்படி சமயத்தில் வாவிபாளையம் கிளையில் இல்லை என்றால் ஆமாம். ஒரு வங்கியானது மற்ற வங்கியுடன் இணைக்கப்படும் போது ஆவணங்கள் அனைத்தும் மாற்றம் செய்யப்பட்டுவிடும் என்றால் ஆமாம்.

2. அழைப்பாணையில் என்ன என்ன ஆவணங்கள் கொண்டு வர சொல்லி உத்தரவிடப்பட்டு இருந்தது என்றால் அழைப்பாணையானது அலுவலக கோப்பில் உள்ளது. நடப்பு கணக்கு துவங்கப்பட்டதற்கான Account Opening Form தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இருந்தது என்றால் ஆமாம். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற 2 முதல் 7 வரையிலான ஆவணங்கள் ஒரு நடப்பு வங்கிக் கணக்கு துவங்கும்போது இணைக்கப்படவேண்டிய ஆவணம் என்றால் ஆமாம். நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வங்கிக்கணக்கு படிவம் புகைப்பட நகல் என்றால் ஆமாம். அதன் அசல் எங்கு உள்ளது என்றால் ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் வங்கியில் தலைமையகமான மும்பையில் இருக்கலாம். தலைமையகம் சரியாக தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நகலில் அசலுடன் சரிப்பார்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்களிடம் இருந்த அசல் ஆவணத்தை சரிப்பார்த்து தான் நகல் எடுக்கப்பட்டு இருக்கும் என்றால் ஆமாம்.

3. 2020 எங்களது வங்கியுடன் ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் வங்கி இணைந்தவுடன் மேற்படி வங்கியின் ஆவணங்கள் எங்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டது. அந்த சமயத்தில் நான் பணியில் இல்லை. இந்த பிரச்சனைக்குறிய வங்கிக் கணக்கு அசல் ஆவணங்கங் எங்களது வங்கிக்கு வந்துள்ளது என்றால் ஆமாம். அந்த சமயத்தில் பணியில் இருந்தவர்கள் மேற்படி வங்கிக்கணக்கை அசல் ஆவணத்தை பார்த்து நகல் எடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அசல் படிவமானது ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் வங்கியிலிருந்து அதன் தலைமையகத்திற்கு சென்றது என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் வங்கியானது

எங்களுடைய வங்கியுடன் இணைக்கப்பட்ட பட்சத்தில் மேற்படி வங்கி தொடர்பான ஆவணங்களை நாங்கள் தான் பராமரிக்க வேண்டும் என்றாலும் அனுப்பிவிட்டதாக என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. ஒரு வங்கிக்கண்கானது Online லும் ஆரம்பிக்கலாம் Offline லும் ஆரம்பிக்கலாம் என்றால் சரிதான். Online கணக்குகள் தனிநபர் சமந்தப்பட்ட கணக்குகளாக இருக்கும் என்றால் சரிதான். 2008 ல் வங்கிக்கணக்கு படிவம் அளித்தால் அதில் உள்ள முகவரியை சரிப்பார்த்து வங்கிக்கணக்கு துவங்குவோமா என்றால் 2008 இருந்த நடைமுறை எனக்கு தெரியவில்லலை. ஆவணங்களை Online லேயே சரிப்பார்த்து விட்டு வங்கிக் கணக்கு துவங்கிவிடுவோம். நான் தாக்கல் செய்துள் வங்கி கணக்கு Openning படிவத்தில் ரேனுகாதேவி மற்றும் கஷ்தூரி என்வரும் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். மேற்படி இரண்டு நபர்கள் புகைப்படமும் மேற்படி படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி இரண்டுநபர்களும் நேரில் வந்து வங்கியில் ஆஜராகி கணக்கு Open செய்ய ஆவணங்கள் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அதன்படி பிரச்சனைக்குறிய வங்கிக் கணக்கு எண் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் ஆவணங்களை சரிப்பார்த்தும் மேலாளராக முன்பாக ஆஜரியுள்ள நபர்களின் அடையாள அட்டையை சரிப்பாாத்தும் தான் வங்கிக் கணக்கு துவங்குவோம் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.07.27 19:13:38 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.